# 5.மலாவி







**'நம் கனவிலிருந்து பூமியில் நழுவி விழுந்த ஒரு** சொர்க்கம்' என்று மலாவி நாட்டை வர்ணிக்கிறார் அங்கு வாழும் ஒரு தமிழர். ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள 54 நாடுகளில் இன்னும் பலர் கண்டு கொள்ளாத ஏழை நாடுதான் மலாவி. தனிநபர் பொருளாதாரத்தைக் கணக்கிட்டால் உலகின் மிக ஏழை நாடுகளில் இது ஒன்று. ஆனால், மக்களின் பண்புகளையோ, இயற்கை வழங்கிய செல்வங்களையோ, பணக்கார நாடுகளில் இல்லாத பாதுகாப்பையோ கணக்கில் கொண்டால் இது பணக்கார நாடு.



மலாவி கொடி

தென்கிழக்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள, தமிழ்நாட்டை விடக்குறைவான பரப்பளவையுடைய (1,18,784 சதுர.கி.மீ) மலாவி, வடக்கே தான்சானியா, வடமேற்கே சாம்பியா, கிழக்கு, தெற்கு, மேற்கு திசைகளில் மொசாம்பிக் ஆகிய நாடுகள் சூழ அமைந்துள்ள குட்டி நாடாகும். இந்த நாட்டின் மூன்றில் ஒரு பகுதியாக ஆப்பிரிக்காவின் மிகப்பெரிய ஏரிகளில்

ஒன்றான மலாவி ஏரி அமைந்துள்ளது. ஏரியின் ஒரு பகுதியின் நீளம் மட்டும் 580 கி.மீட்டர்! ஏரித்தண்ணீர் முழுவதும் நன்னீர். குடிநீர் பஞ்சம் கனவிலும் வராத நாடு. இதைத்தவிர இந்த ஏரியிலிருந்து வடியும் நீர் ஷயர் ஆறாக ஓடுகிறது.



மலாவி ஏரி

முழுவதும் விவசாய நாடான மலாவியில் 90% மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். புகையிலை, பருத்தி, டீ, கரும்பு, சோளம் ஆகியன வளர்ந்து செழிக்கின்றன. எல்லாவகையான மாம்பழங்களும்,வாழை, பப்பாளி, அன்னாசி வகைகளும் இங்கு ஏராளம்.



செழிப்பான மலாவி பழங்கள்

வானத்தின் தீவு என்று அழைக்கப்படும் முலாஜே மலை நாட்டின் அழகிற்கு அழகு சேர்க்கிறது. சுண்ணாம்புக்கல், யூரேனியம், நிலக்கரி, பாக்சைட் நிலத்தில் கிடைக்கிறது. ஆனால் வேடிக்கை என்னவென்றால் நாட்டின் 1.6 கோடி மக்களில் பெரும்பாலோர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கிறார்கள். தனிநபர் வருவாய் வெறும் $ 253 (உலகில் 181வது இடம்) . அரசியலாரின் அளவற்ற ஊழலே இதற்குக் காரணம்.

60,000 ஆண்டுகளுக்கு முன்பே மலாவியில் மனிதர்கள் வாழ்ந்த தடயங்கள் உள்ளன. இங்கிருந்த புதர் மனிதர்களின் பாறை ஓவியங்கள் தலைநகர் **லிலாங்வி** க்கு

வெளியே காணப்படுகின்றன. 10ஆம் நூற்றாண்டில் பண்டு என்ற குழுவினரின் வாழ்விடமாக மாறிய இந்தத் தேசத்திற்கு முதல் ஐரோப்பியர்களாகப் போர்ச்சுகீசியர்கள் வந்து தந்தம், இரும்பு, முதலியன மட்டுமன்றி மக்களையும் அடிமைகளாகக் கொண்டுசென்றார்கள். 1859 இல் வேதபோதகரும், ஆய்வுப்பயணியுமான டேவிட் லிவிங்ஸ்டன் மலாவி ஏரிக்கரையில் வந்து இறங்கி, இப்பகுதியை ஐரோப்பியர்களுக்கு வெளிச்சமிட்டார். 1891 இல் இது பிரிட்டனின் காலனியாகி, பின 1953 இல் நியாசாலாந்து என்று அழைக்கப்பட்டு எலிசபெத் ராணியின் கீழ், பிரிட்டனின் பாதுகாப்பு வளையத்திற்குள் இணைந்த தேசமாகி, பின் ஒருவழியாக மலாவி என்ற பெயருடன் 06.07.1964 இல் விடுதலைபெற்ற நாடானது.



## டாக்டர் ஹேஸ்டிங்ஸ் பண்டா


1964 இல் நாட்டின் முதல் பிரதமராகப் பொறுப்பேற்ற *டாக்டர் ஹேஸ்டிங்ஸ் பண்டா* 'ஒரே கட்சி, ஒரே ஆட்சி, ஒரே தலைவர்' என்ற முழக்கத்துடன் 1971 இல் தம்மை ஆயுள்கால அதிபராகப் பிரகடனப்படுத்தி எதிர்த்தவர்கள் 18,000 பேர்வரை கொன்றுகுவித்தார். தென்னாப்பிரிக்க இனவெறி அரசை ஆதரித்தார். இவர்தம் போக்கால் கொதிப்படைந்த மக்கள் புரட்சியில் ஈடுபட்டனர், பக்கத்து ஆப்பிரிக்க நாடுகளின் தலையீட்டால் அவரின் 30 ஆண்டுகால ஆட்சி முடிவுற்று தேர்தல் நடைபெற்று அதில் அவர் தோல்வியுற்று *பிக்கிலி முலுசி* ஆட்சிக்கு வந்தார்.



## பிக்கிலி முலுசி

இவர் ஆட்சியில் ஊழல் தலைவிரித்தாடியது. பஞ்சம் வரப்போகிறது எனத்தெரிந்தும் இவர் ஆட்கள் 1,60,000 டன் சோளத்தை வெளியே விற்றனர். இதன் விளைவாக 2002-03 இல் 30 இலட்சம் மக்கள் உண்ண உணவின்றி தவித்தனர். இவர் வளர்த்த ஊழலை

முடிவுகட்டுவதாகக்கூறி, 2004 இல் ஆட்சிக்குவந்த பொருளாதார வல்லுநர் *டாக்டர் பிங்குவா முத்தரிக்காவும்* மக்கள் நலனில் அக்கறை செலுத்தவில்லை. மனித உரிமை மீறல்களும், அடக்குமுறையும் இவர் ஆட்சியில் கொடிகட்டிப்பறந்தன.




டாக்டர் பிங்குவா முத்தரிக்கா

2004 இல் ஏற்பட்ட உணவுப்பஞ்சத்தில் 34% மக்கள் உணவுக்கு அல்லாடினர். அயல்நாட்டு உதவிகளை இழந்தார். எனினும் தேர்தல் தில்லுமுல்லுகளால் அவர் தொடர்ந்து 8 ஆண்டுகள் ஆட்சியில் இருந்து ஒருவழியாக மாரடைப்பால் 2012 இல் மாண்டார். இவருக்குப்பின் துணை அதிபராக இருந்த *ஜாய்ஸ் பண்டா* அதிபரானவுடன், மக்கள் இந்த அம்மையாரேனும் தாய்மையுடன் மக்களுக்கு நல்லாட்சி வழங்குவார் என எதிர்பார்த்தனர்.



ஜாய்ஸ் பண்டா

நாடு சிறிது வளர்ச்சி கண்டது வளர்ச்சி விகிதம் 2% லிருந்து 5% ஆனது. அயல்நாட்டு உதவிகள் மீண்டன. எனினும் முன்னாள் அதிபரான முத்திரிக்காவின் தம்பி *பீட்டர் முத்தரிக்கா* இவரைக் கவிழ்ப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். அம்மையார் நியாயமாக ஆட்சிப் பீடத்தில் அமரத் தடைபோட்ட சதிகளுக்காக, பீட்டரும், முன்னாள் அமைச்சர்கள் 11 பேரும் அரசு விரோத குற்றம் சாட்டப்பட்டனர். இந்நிலையில் அம்மையாரின் அதிகாரிகள் சிலர் **$ 32** மில்லியன் அளவு தொகையை அரசு நிதியிலிருந்து சூறையாடி தங்கள் கார்களிலும், வீடுகளிலும் பதுக்கியிருந்தது கண்டறியப்பட்டது. தர்மசங்கடமான இச்சூழலில் அம்மையார் தம் ஆட்சியைக் கலைத்துத் தேர்தலை அறிவித்தார். 2014 தேர்தலில் அவர் 3வது இடத்திற்குத் தள்ளப்பட்டு, பீட்டர் முத்திரிக்கா ஆட்சியைக் கைப்பற்றி தற்போது அதிபராக விளங்கி வருகிறார். முற்றிலும் தேர்தல் தில்லுமுல்லுகளால் அவர் வெற்றிபெற்றதாகக் குற்றச்சாட்டு உள்ளது.



## இன்றயை அதிபர் பீட்டர் முத்திரிக்கா

விடுதலை பெற்ற பின்பும், இப்படிப் பொறுப்பற்ற ஆட்சியாளர்களால் மக்கள் அலைக்கழிக்கப்பட்டாலும் ஆப்பிரிக்க மக்களில் மிகவும் முனைப்புடன் இருப்பவர்கள் மலாவியர்களே என்ற சிறப்பு இவர்களுக்கு உண்டு. மேலும் இவர்கள் வெளிப்படையானவர்கள்; அன்பானவர்கள்; உதவி கேட்டால் செய்யத்தயங்காதவர்கள்; ஆப்பிரிக்க கண்டத்திலேயே, எந்த நாட்டையும் விட பாதுகாப்பான தேசம் எங்களுடையது என்ற பெருமைக்குரியவர்கள். 'ஆப்பிரிக்காவின் இதமான நெஞ்சம்' என்பது மலாவியின் பட்டப்பெயர். கிராமங்களில் பெரும்பாலும் பெண்களே தலைவியர்களாக இருக்கின்றனர். ஆண்கள் இவர்களுக்குத் துணைபுரியும் நிலையில்தான் உள்ளனர். மிகுந்த அதிகாரம் கொண்டவர்கள் இந்த கிராமத்தலைவியர்கள். ஊர்ச்சச்சரவுகளைத் தீர்த்தல், கட்டடம் கட்ட அனுமதித்தல், திருமணம், விவாகரத்து செய்ய அனுமதித்தல் முதலியன இவர்கள் ஆளுகையில் உள்ளன. இவர்களுக்கு அரசே நேரடியாக ஊதியம் வழங்குகிறது.



## அன்பான முனைப்பான மலாவியர்

மக்களின் பூர்வீக உணவு நிசிமா என்ற சோளப்பண்டம். பெரிய நசிமாவை நடுவில் வைத்து, அவரவர் தேவையானதைப் பிய்த்து உருண்டையாக்கி, தக்காளிச்சட்னியில் தோய்த்து கீரைகள், பீன்ஸ், மீன், கோழி முதலியவற்றைத் தொட்டுக்கொண்டு கையால் உண்பர். பிளான்டயர் நகரில் நடக்கும் நசிமா உண்ணும் போட்டி புகழ்பெற்றது. இதில் ஒருவர் 3 கிலோ வரை உண்பது சாதாரணம்.மக்கள் தீவிர இனிப்பு விரும்பிகள். 3 தேக்கரண்டி சர்க்கரை போட்டே தேநீர் அருந்தவர். இனிப்பு

மிகுதியாக்கப்பட்ட கொக்கோ கோலா, பான்டா, ஸ்பிரைட் இவர்களுக்கு விருப்பமான பானங்கள்.

மக்களில் 80% பேர்கள் கிறித்துவர்கள். 12% பேர்கள் இசுலாமியர். ஆங்கிலமும், சிசேவா மொழியும் ஆட்சி மொழிகள். இன்னும் கல்வியறிவு 62.7% தான் உள்ளது. 14% மக்கள் எய்ட்ஸ் நோய்க்கு இரையாகி உள்ளது இங்கு கொடுமையானது. இது நாட்டின் பொருளாதாரத்தையும் வாழ்வாதாரத்தையும் தீய்க்கிறது. 15 வயதிற்குள் திருமணம் செய்வது பெருவழக்கமாகி சீரழிவுகள் மிகுந்ததால், இப்போது 18 வயதிற்குப்பின்னரே திருமணம் என்பதைச் சட்டமாக்கியிருக்கின்றனர்.. உலகத்திலேயே குழந்தைகள் மரணம் மிகுந்திருக்கும் நாடுகளில் மலாவி முன்னணி வகிக்கிறது. சென்ற 2015 ஜனவரியில் மழையால் பெருக்கெடுத்த வெள்ளம் 10 இலட்சம் மக்களை நிர்கதிக்குள்ளாக்கியதும், 64,000 ஹெக்டேர் நிலத்தைப் பாழ்படுத்தியதும் இவர்களின் புதிய சோகமாகும்.




## அல்பினிச நோயாளி

இங்கு ஒரு கொடுமையான மூட நம்பிக்கை நிலவுகிறது. அல்பினிசம் என்ற நோயால் தோல் வெண்மையாகும் நோயாளிகளைச் சமூக விரோதிகள் கடத்திச்சென்று, கொன்று இவர்கள் தோலைச்




சூன்யத்திற்கும், மாந்திரீகங்களுக்கும் பயன்படுத்துகின்றனர். இந்த மனிதத்தோல் பெருந்தொகைக்கு விற்கப்படுகிறது. இந்தக் கடத்தல்காரர்களைக் காணுமிடத்தில் சுட அரசு உத்தரவிட்டு இப்போது அல்பினோ மனிதர்கள் சிறப்பு முகாம்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். 12பேர் அமர்ந்து பயணிக்கும் சிற்றுந்துகளில் காய்கறி கூடைகள், ஆடு, மாடு கோழி இவற்றுடன் 25 பேர் பயணிக்கும் காட்சியை இங்கு சாதாரணமாகக் காணலாம். கால்சட்டை போடுவதைப் பள்ளிப்பிள்ளைகளின்

வழக்கம் என ஒதுக்கி, மேல்சட்டை மட்டுமே போட்டுத்திரியும் ஆண்களையும் காணலாம்.. டிஜிடல் காமரா, செல்பேசி, முதலியவற்றைக் கண்டால் வேடிக்கை பார்க்கும் கூட்டம் இன்னும் இங்கு உள்ளது. அயல்நாட்டு பொருள்கள் அத்தனையும் இங்கு விலை மிக அதிகம். ஐஸ்கிரீம் ஒரு கரண்டி- ரூ140, 100 கிராம் சாக்லேட்- ரூ280,ரொட்டி 1 கிலோ- ரூ140, பால்மாவு 1 கிலோ-ரூ700, சமையல் எண்ணெய் 1லி- ரூ280, பெட்ரோல் 1லி- ரூ120 இவர்களின் நாணயமான குவாட்சா. ஒரு இந்திய ரூபாய்க்கு 8.9 ஆகும்.



சரக்கு எடுத்துச்செல்லும் சிறு வணிகர்கள்

ஆசிய, ஐரோப்பிய தொழிலாளர்கள், வணிகர்கள் பலரும் வாழும் இந்நாட்டில் ஏறத்தாழ 500 தமிழர்களும் வாழ்கிறார்கள். நம்மூரிலிருந்து மூட்டையாகச் சட்டை பட்டன்களை எடுத்துச்சென்று இந்த அப்பாவி மக்களிடம் பெரும் இலாபத்திற்கு விற்று ஒருவர் இங்கு கோடீஸ்வரராகியிருக்கிறாராம். மலாவி - லிலாங்வி தமிழ்ச் சங்கம்: தலைநகர் லிலாங்வி பகுதியில் வாழும் தமிழர்களால் உருவாக்கப்பட்டு, இச்சங்கத்தின் சார்பில் இந்திய விழாக்கள் அனைத்தும் தவறாது கொண்டாடப்பட்டு வருகின்றன. சங்கத் தலைவர் : எஸ்.அண்ணாமலை - {பேசி:(00265)888866111} ஆவார். மே முதல் நவம்பர் வரை உள்ள காலம் இந்நாட்டிற்குப் பயணம் செய்ய உகந்ததாகும்.

2010 இல் புதுடில்லியில் நடைபெற்ற காமல்வெல்த் போட்டிகளில் கலந்துகொள்ள மலாவி வீரர்கள் இந்தியாவிற்கு வருகை புரிந்தார்கள். அவர்களைப்பற்றி இந்திய அரசின் தூர்தர்ஷன் *'உலகிலேயே மிகவும் வளர்ச்சி குறைந்த நாடான மலாவி'* என்ற அடைமொழியுடன் விமர்சித்தது. இதைக்கேட்டு மலாவி அரசு கடும் கண்டனம் தெரிவிக்க, இந்திய அரசு தலையிட்டு, பின் தூர்தர்ஷன் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்கவேண்டியதாயிற்று.

*(வெற்றி வேந்தன்:டிசம்பர் 2015)*